# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව 2024

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024

# ANNUAL PERFORMANCE REPORT 2024



## ණය සහනදායක මණ්ඩලයීය දෙපාර්තමේන්තුව
## கடன் இணக்க சபைத் திணைக்களம்
## DEPARTMENT OF DEBT CONCILIATION BOARD

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## ANNUAL PERFORMANCE REPORT

# 2024

ණය සහනදායක මණ්ඩලයීය දෙපාර්තමේන්තුව

**கடன் இணக்க சபைத் திணைக்களம்**

**DEPARTMENT OF DEBT CONCILIATION BOARD**

# 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# கடன் இணக்க சபைத் திணைக்களம்

# செலவினத் தலைப்பு இலக்கம் 231

**உள்ளடக்கம்**


அத்தியாயம் 01 - தாபன ரீதியான கண்ணோட்டம் / நடைமுறைப்படுத்தலின் சாராம்சம்

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் தொலை நோக்கு

அத்தியாயம் 03 - ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டி

அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வளக் கண்ணோட்டம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

# 01 அத்தியாயம் - தாபன ரீதியான கண்ணோட்டம் / நடைமுறைப்படுத்தலின் சாராம்சம்

## *1.1* அறிமுகம்

காணிகள், வயல் நிலங்கள், தோட்டந்தொரவுகள் வீடுகள் போன்ற அசையாத சொத்துக்களை உத்தரவாதத்தின் அடிப்படையில் சொந்த உறுதிப்பத்திரங்கள், அடகு உறுதிப்பத்திரம் என்பவற்றின் மீது பிணையாக வைத்துக்கொள்ளப்பட்ட கடன் தொடர்பாகவோ அல்லது அவ்வாறான பாதுகாப்பான கடன் ஒன்று தொடர்பாகவோ கடன்பட்டு உள்ள பொதுமக்களை மேற்படி கடன் பொறுப்பில் இருந்து விடுவித்துக்கொள்வதற்காக ஏதேனும் சலுகை நடவடிக்கை ஒன்றினை அறிமுகம் செய்வதனை நோக்காகக் கொண்டு 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இணக்கக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் மேற்படி திணைக்களம் தாபிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 29 ஆம் இலக்க திருத்தச் சட்டத்திற்கு அமைய வெறுமனே கடன் கொடுக்கல் வாங்கலுக்காக எழுதப்பட்ட சொந்த உறுதிப்பத்திரம் தொடர்பில் சபை தலையிட்டு சலுகையினைப் பெற்றுக்கொடுக்க முடிந்தமையினால் மேற்படி சலுகை வழங்கும் செயற்பாடு மேலும் விரிவடைந்து உள்ளது. மேற்படி சபையின் செயற்பாட்டின் ஊடாக பண உரித்தாளர்கள் தான்றோன்றித்தனமாக கடன் பெற்றவர்களை சூரையாடுவதற்கான சந்தர்ப்பம் அருகிச் செல்கின்றது. சபையின் அடிப்படை நோக்கம் இதுவாயினும் அதன் மூலம் கடன் உரித்தாளர்களுக்கு அநியாயம் நடைபெறுவதும் தடுக்கப்படுகின்றது. அடகு உறுதிப்பத்திரத்தின் மீதும் மற்றும் உத்தரவாத சொந்த உறுதிப்பத்திரத்தின் மீதும் பிணை வைக்கப்பட்டு உள்ள அசையாத சொத்துக்கள் தொடர்பாக கடனாளிகளுக்கு இலகுவானதும் மற்றும் கடன் உரித்தாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவி செய்தல் மேற்படி சபையின் நோக்கம் ஆகும். மேற்படி சபையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்காக எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதுடன், சபையின் நடவடிக்கைகள் முத்திரைக் கட்டணங்கள் இன்றி நிறைவேற்றப்படுகின்றது. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணங்களாக அறவிடப்படுவது மிகவும் சிறு தொகை ஆகையினால் கடன் பொறுப்பில் சிக்குண்டு இருக்கும் மக்களுக்கு இதன் மூலம் கிடைக்கப்பெற்று உள்ள சேவை மிகவும் பாரியதாகும். அவ்வாறே தமக்குப் பதிலாக சபையின் முன்னிலையில் சட்டதரணிகளை தோன்றச் செய்தல் கட்டாயமானதல்ல என்பதனால் பொதுமக்களுக்காக மேற்கொள்ளப்படும் சேவை அளப்பரிய ஒன்றாகும்.

2019 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கடன் இணக்கச் (திருத்த) சட்டத்திற்கு அமைய கடன் இணக்க சபை அமைச்சரினால் நியமனம் செய்யப்படும் 11 உறுப்பினர்களை உள்ளடக்கி உள்ளதுடன், சபையின் தலைவர் அவர்கள் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவராக அல்லது மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஒருவராக நீதிபதி பதவி ஒன்றினை வகிக்கும் அல்லது வகித்துள்ள நபர் ஒருவராக அல்லது சட்டதரணி ஒருவராக பதினைந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தினைக்கொண்ட நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

சபையின் ஏனைய உறுப்பினர்கள் ஒன்பது பேர் -

- சட்டதரணி ஒருவராக பதினைந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தினைக்கொண்ட அல்லது
- இலங்கை நிருவாக சேவையிலுள்ள அல்லது நாடளாயவிய சேவை ஒன்றின் தரம் I இலுள்ள பதவி ஒன்றினை வகிக்கும் அல்லது வகித்துள்ள நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.
- வர்த்தகத் துறையில் அனுபவம் உள்ள ஒருவர்

அமைச்சரினால் குறித்துரைக்கப்படக் கூடிய வகையில் அமைச்சரினால் நியமனம் செய்யப்படும் தலைவர் ஒருவர் மற்றும் நான்கு பேரிலும் அதிகரிக்காத மற்றும் இரண்டு பேரிலும் குறையாத எண்ணிக்கையினைக் கொண்ட வேறு உறுப்பினர்கள் ஆகியோர் ஒவ்வொரு கிளைச் சபைகளிலும் உள்ளடக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

- ஒவ்வொரு கிளைச் சபைகளினதும் தலைவர், சபையின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவராக அல்லது மாவட்ட நீதிபதி ஒருவராக நீதிபதி பதவியினை வகிக்கும் அல்லது வகித்துள்ள நபர் ஒருவராக அல்லது,

- சட்டதரணி ஒருவராக பதினைந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் சார் அனுபவத்தினைக்கொண்ட நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கிளைச் சபைகளினதும் ஏனைய உறுப்பினர்கள்,

- சட்டதரணி ஒருவராக பத்து வருடங்களுக்குக் குறையாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்ட அல்லது,
- இலங்கை நிருவாக சேவையில் அல்லது நாடளாவிய சேவை ஒன்றில் தரம் I இலுள்ள பதவி ஒன்றினை வகிக்கும் அல்லது வகித்து உள்ள நபர் ஒருவரை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

மேற்படி சபையின் கடமை நடவடிக்கைகள் பொதுவான ஒரு நீதிமன்றத்தில் நிலவும் விதத்திலும் பார்க்க வேறு ஒரு விதமாக இருக்கும். சபையின் முன்னிலையில் கைச்சாத்திடும் ஒப்பந்தங்கள் தரப்பினர்கள் அவரவர்களது விருப்பத்திற்கு அமைய கைச்சாத்திடும் ஒப்பந்தங்களே அன்றி சபையின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது அல்ல. அவ்வாறெனினும் நியாயமற்ற வகையிலான வட்டியினை அளவில் குறைப்பதற்கும் இரு தரப்பினர்களினதும் இணக்கப்பாட்டின் கீழ் கடன் செலுத்தும் காலத்தை நீடிப்பதற்கும், சபையினால் முன்வைக்கப்படும் நியாயமான முன்மொழிவுகளை கடன் உரித்தாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனின் அது தொடர்பாக கட்டளைகள் சட்டத்தின் கீழ் கடனாளிகளுக்கு சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கும் சபைக்கு அதிகாரங்கள் உள்ளன.

அவ்வாறே கடன் உரித்துடைய தரப்பினர் இறுதி விசாரணைக்காக வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய விசாரணைக்காகச் சமூகமளிக்கவில்லை எனின் ஒரு தரப்பு வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் கடனாளிக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். எனினும், பதிவுத் தபால் மூலம் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஊடாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் கடன் உரித்தாளருக்கு அறிவித்து கடன் உரித்துடைய தரப்பினர் வேண்டுமென்றே விசாரணைக்குச் சமூகமளித்தலைத் தவிர்ப்பதாக சபை உறுதியாக அறிந்து கொண்டால் மாத்திரமே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் அவ்வாறான சான்றிதழ் ஒன்றினை வழங்குவதன் ஊடாகக் கிடைக்கும் நன்மை கடனாளிக்கு உரித்தானதாகும். வேறு ஒரு நீதிமன்றத்தில் இது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி சான்றிதழினை உரிய நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தால் கடன் தொகையினைப் மீட்டு எடுப்பதற்காக ஆகக் கூடியது 10 வருட காலத்திற்கு உட்பட்ட வகையில் காலம் ஒன்றினை வழங்குவதற்கும் வட்டியினை ஆகக் குறைந்த வட்டி வீதம் வரை குறைப்பதற்கும் வழக்குகளுக்குரிய எந்தவொரு கட்டணத்தினையும் கடன்காரரிடமிருந்து அறவிடாமல் இருப்பதற்கும் கடன் இணக்கக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

## *1.2* தாபனத்தின் தொலை நோக்கு, செயற்பணி, இலக்குகள்

### தொலைநோக்கு

*அசையாத சொத்துக்கள் தொடர்பில் கடன் கொடுக்கல் வாங்கலினால் பாதிக்கப்பட்டு உள்ள பொதுமக்களுக்கு கடன் சுமையில் இருந்து மீள்வதற்கு சலுகை ரீதியான செயற்திட்டம் ஒன்றினை வழங்குதல்.*

### செயற்பணி

*அடகு உறுதிப்பத்திரம், உத்தரவாத சொந்த உறுதிப்பத்திரம் அல்லது வெறுமனே கடன் கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்காக சொந்த உறுதிப்பத்திரங்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ஒன்றிற்காக பிணையாக வைக்கப்பட்டு உள்ள விவசாய நிலங்கள் அல்லது வீடுவாசல் காணிகள் போன்ற அசையாத சொத்து ஒன்றினை கடன் சலுகை அடிப்படையில் தவணைக் கட்டணங்களின் ஊடாகவும் மற்றும் குறைந்த வட்டி வீதத்தின் கீழும் செலுத்தி சொத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கு கடன் பெற்றவர்களுக்குத் தேவையான சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் சலுகையினைப் பெற்றுக்கொடுத்தல்.*

### இலக்குகள்

*அசையாத சொத்துக்கள் தொடர்பில் அடகு உத்தரவாத சொந்த உறுதிப்பத்திரம் ஒன்றிற்காக மற்றும் வெறுமனே கடன் கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்காக எழுதப்பட்ட சொந்த உறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய முறிகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய கடன் தொடர்பில் தரப்பினர்களை இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வருதல்.*

## 1.3 *பிரதான பணிகள்*

*காணிகள், வயற் காணிகள், தோட்டந்தொரவுகள், வீடுகள் போன்ற அசையாத சொத்துக்களை ஒப்பந்த சொந்த உறுதிப்பத்திரங்கள், அடகு உறுதிப்பத்திரம் ஒன்றின் அடிப்படையில் பிணையாக வைத்துக்கொள்ளப்பட்ட கடன் தொடர்பில் அல்லது அவ்வாறான பாதுகாப்பான கடன் ஒன்று தொடர்பில் கடன் பெற்றுக்கொண்டுள்ள பொதுமக்களை மேற்படி கடன் பொறுப்பில் இருந்து விடுவிப்பதற்காக 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 29 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்திற்கு அமைய வெறுமனே கடன்கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்காக எழுதப்பட்ட சொந்த உறுதிப்பத்திரம் தொடர்பாக சபை தலையிட்டு சலுகையினைப் பெற்றுக்கொடுப்பதற்கு இயலுமாகி உள்ளதனால் மேற்படி சலுகை நடவடிக்கை மேலும் விரிவடைந்து உள்ளது. மேற்படி சபையின் செயற்பாட்டின் ஊடாக கடன் உரித்தாளர்கள் தான்றோன்றித்தனமாக கடனாளிகளை சூரையாடுவதற்கான வாய்ப்பு அருகிச் செல்கின்றது. சபையின் அடிப்படை நோக்கம் இதுவாயினும் அதனூடாக கடன் உரித்தாளர்களுக்கு அநியாயம் ஒன்று நடைபெறுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை. அடகு உறுதிப்பத்திரத்தின் மீதும் மற்றும் உத்தரவாத சொந்த உறுதிப்பத்திரத்தின் மீதும் பிணையாக வைக்கப்பட்டு உள்ள அசையாத சொத்துக்கள் தொடர்பில் கடனாளிக்கு இலகுவானதும் மற்றும் கடன் உரித்தாளர் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி சொத்துக்களை விடுவித்துக் கொள்வதற்காக உதவி செய்தல் மேற்படி சபையின் நோக்கமாகும்.*

*இந்த சபையிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்திற்காக எந்தவொரு கட்டணமும் அறவிடப்படுவதில்லை என்பதுடன் சபையின் நடவடிக்கைகள் எதுவித முத்திரைக் கட்டணங்களும் இன்றி நிறைவேற்றப்படுகின்றன. வர்த்தமானி மற்றும் அறிவித்தல் கட்டணங்களாக அறவிடப்படுவது மிகவும் சிறு தொகை ஒன்றாகையினால் கடன் சுமையினால் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு இதனூடாகக் கிடைக்கப்பெற்றுள்ள சேவை பாரிய ஒன்றாகும். தமக்காக சபையின் முன்னிலையில் சட்டதரணிகளைத் தோன்றச் செய்தல் கட்டாயமானதல்ல ஆகையினால் பொதுமக்களுக்கு ஆற்றப்படும் சேவை அளப்பரிய ஒன்றாகும்.*

## 1.4ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## கடன் இணக்க சபை உறுப்பினர்கள்

| பெயர் | பதவி | 2019 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கடன் இணக்க சபை (திருத்தம் செய்யப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் உப பிரிவின் பிரகாரம் உரித்தாகும் சேவை |
|---|---|---|
| **கடன் இணக்க சபை** | | |
| 6. திருமதி. டபிள்யூ. ஐராங்கனீ பெரேரா | தலைவர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 7. திருமதி. குசும் செனரத் பதிரண | உறுப்பினர் | ஓய்வு பெற்ற தொழிலாளர் நியாய சபைத் தலைவர் / மேலதிக நீதவான |
| 8. திருமதி. டபிள்யூ. சீ. புஷ்பமாலி | உறுப்பினர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 9. திரு. கே.எச். பிரேமதாஸ | உறுப்பினர் | ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் |
| 10. திரு. கே.ஜீ. ரஞ்ஜித் | உறுப்பினர் | சட்டதரணி மற்றும் நொத்தாரிஸ் |
| **கொழும்பு கடன் இணக்க சபை** | | |
| 6. திரு. பியசேன ரணசிங்ஹ | தலைவர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 7. திருமதி. பத்மா பலிஹக்கார | உறுப்பினர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 8. திரு. எம்.ஏ.மில்ரன் மாரசிங்ஹ | உறுப்பினர் | சட்டதரணி |
| 9. திரு. சரத் சந்திரசிறி விதான | உறுப்பினர் | இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் (விஷேட தரம்) |
| 10. திரு. சோமபால கருணாதிலக | உறுப்பினர் | ஓய்வு பெற்ற அதிபர் |
| **கம்பஹா கடன் இணக்க சபை** | | |
| 4. திருமதி. பியசீலி விகரமசிங்ஹ மத்துரட | தலைவர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 5. திருமதி. நந்தினீ ரணவக | உறுப்பினர் | ஓய்வு பெற்ற பாராளுமன்றப் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) |
| 6. திரு. டீ.எம். கருணாரத்ன | உறுப்பினர் | இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் |
| **காலி கடன் இணக்க சபை** | | |
| 2 திரு. மஹிந்த பிணிதிய | தலைவர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 3 திரு.கே.பி.டீ. ஜயந்த குணரத்ன | உறுப்பினர் | சட்டதரணி |
| 4 திரு. ஜீ.பி.பியசேன | உறுப்பினர் | ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் |
| **குருணாகல் கடன் இணக்க சபை** | | |
| 4. திரு. ஆர்.எம்.பி.எஸ்.கே. ரத்னாயக்க | தலைவர் | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதவான் |
| 5. திரு. ஜே.ஜி.என். திலகரத்ன | உறுப்பினர் | ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| 6. திரு. விமலா சேனானாயக்க | உறுப்பினர் | சட்டதரணி மற்றும் நொத்தாரிஸ் |

# 02 அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

## 2024.01.01 முதல் 20224.12.31 வரையான கடன் இணக்க சபையின் செயலாற்றுகை

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| 2024..01.01 ஆம் திகதியன்று முன் கொண்டு வரப்பட்ட பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1157 |
| ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்ற புதிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 642 |
| மீளாய்விற்காகக் கிடைக்கப் பெற்றுள்ள மற்றும் தள்ளுபடிக்கான கோரிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 247 |
| பிரதான கிளைக்கு மற்றும் கிளைச் சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 12 |
| மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2058 |
| இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 313 |
| தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 170 |
| மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 86 |
| சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 59 |
| வழக்கு நிரலில் இருந்து அகற்றப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 91 |
| ஒத்தி வைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 97 |
| கிளைச் சபைகளுக்கு அனுப்பப்பபட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 31 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 13 |
| நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 453 |
| எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1313 |
| பணம் செலுத்துவதற்காக மீண்டும் கோரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 745 |
| 2024.12.31 ஆம் திகதியன்று சீராக்கல்கள் | 214 |
| 2024.12.31 ஆம் திகதியன்று பூர்த்தி அடையாது எஞ்சி இருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | **959** |

- 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையின் 64% சதவீதமாகும்.

**<u>மாவட்ட ரீதியில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை</u>**

*2024.01.01* ஆம் திகதி முதல் *2024.12.31* ஆம் திகதி வரை.

| கிளைகள் | மாவட்டம் | **2024.12.31 ஆம் திகதியன்று முன்வைக்கப்பட்டு உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| பிரதான / கொழும்பு | கொழும்பு | *72* |
| | களுத்துறை | *74* |
| | இரத்தினபுரி | *25* |
| | பதுளை | *02* |
| | அம்பாறை | *02* |
| | நுவரெலியா | *01* |
| | மொனராகலை | *02* |
| | கேகாலை | *08* |
| | கண்டி | *01* |
| கம்பஹா | கம்பஹா | *158* |
| காலி | காலி | *84* |
| | மாத்தறை | *43* |
| | ஹம்பாந்தோட்டை | *09* |
| குருணாகல் | குருணாகல் | *77* |
| | கேகாலை | *29* |
| | கண்டி | *31* |
| | புத்தளம் | *11* |
| | மாத்தளை | *10* |
| | அநுராதபுரம் | *02* |
| | **மொத்தம்** | *642* |

| **கிளைச் சபை** | **2024.01.01. ஆம் திகதியன்று கிளைகளில் நிலவும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **2024.12.31 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **2024.12.31 ஆம் திகதியன்று எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| பிரதான சபை | 162 | 95 | 52 | 109 |
| கொழும்பு கிளைச் சபை | 159 | 93 | 49 | 113 |
| காலி கிளைச் சபை | 212 | 136 | 185 | 76 |
| கம்பஹா கிளைச் சபை | 383 | 158 | 47 | 293 |
| குருணாகல் கிளைச் சபை | 241 | 160 | 120 | 154 |
| மொத்தம் | **1157** | **642** | **453** | **745** |

## நிதிச் செயலாற்றுகை

| செலவு விடயம் | 2024 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2024.12.31 ஆம் திகதியன்று செலவு (ரூ.மி.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதிச் செயலாற்றுகை % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 3.10 | 2.62 | 84.44 |
| மீண்டெழும் | 78.13 | 66.47 | 85.08 |
| மொத்தம் | 81.23 | 69.09 | 85.05 |

# களத்தின் தொலைநோக்கு

கடன் இணக்க சபையானது தற்போதாகும் போது கொழும்பு 08, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள இல. 35 எனும் இடத்தில் செயற்பட்டு வருவதுடன், நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கடன் இணக்க சபையில் சலுகை கோரி நாளாந்தம் கொழும்பிற்கு வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும் மற்றும் நாளாந்தம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமை காரணமாகவும் பொதுமக்களுக்கு வினைத்திறனுடைய வகையில் சேவையினை வழங்குவதற்காகவும் / கடன் இணக்க சபையின் சேவையினை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் நோக்கிலும் 2019 ஆம் ஆண்டில் 04 ஆம் இலக்க கடன் இணக்கச் (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்திற்கு அமைய இலங்கைக் கடன் இணக்க சபை என்ற வகையில் விரிவுபடுத்தப்பட்டது.

அதற்கு அமைய கடன் இணக்க சபைக்கு நாளாந்தம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப கூடுதலாக விண்ணப்பங்கள் முன்வைக்கப்படும் மாவட்டங்களைக் கவனத்தில் கொண்டு காலி, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு கிளைச் சபைகள் தாபிக்கப்பட்டன. மேலும் வடக்கு, வட மத்திய, வட மேல் மற்றும் மத்திய மாகாணங்களையும் தழுவப்படும் வகையில் குருணாகல் மாவட்டத்தினை மையமாகக் கொண்டும் கிளைச் சபை ஒன்று தாபிக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய இலங்கை கடன் இணக்க சபையின் சேவையினை மிகவும் வினைத்திறனுடனும் மற்றும் பயனுறுதி உள்ள வகையிலும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அரச கணக்குகள் குழுவின் முன்மொழிவிற்கு அமைய எதிர்வரும் காலத்தில் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுவதற்கு அமைய ஏனைய மாகாணங்களும் தழுவப்படும் வகையில் கிளைச் சபைகளைத் தாபிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே சேவையினை மிகவும் வினைத்திறனுடன் பேணி வரும் வகையில் கொள்ளளவு விருத்தி மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே நிறுவனம் தொடர்பான பொதுமக்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுபாஷினி தயானந்த
செயலாளர்
கடன் இணக்க சபைத் திணைக்களம்

# 03 அத்தியாயம் - 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | - | - | |
| - | வைப்புகள் | | 67,757,000 | 59,854,000 | ஏசீஏ-3 |
| - | முற்பணக் கணக்குகள் | | 300,873 | 116,454 | ஏசீஏ-4 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 1,203,210 | 1,076,517 | ஏசீஏ-5 |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ)(ஆ)** | | **69,261,083** | **61,046,971** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **69,261,083** | **61,046,971** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ)** | | 644,075 | **233,684** | |
| | | | 68,617,008 | **60,813,287** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 45,130,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 39,874,644 | 34,337,031 | |
| 32,900,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 26,565,899 | 26,023,106 | ஏசீஏ-2(ii)* |
| 100,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 28,640 | 30,484 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |

1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **78,130,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **66,469,183** | **60,390,622** | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| 1,000,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 867,000 | - | |
| 1,700,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,486,116 | 493,470 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 400,000 | திறன் விருத்தி | 14 | 264,500 | 90,000 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| **900,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **2,617,616** | **583,470** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 223,187 | 111,179 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 1,471,536 | 1,067,800 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **1,694,723** | **1,178,979** | |
| | **மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊஎஏ)** | | 70,781,522 | 62,153,070 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ)** | | **2,164,514** | **(1,339,783)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (2,213,661) | (1,339,783) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | 49,147 | - | ஏசீஏ-3 |

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 13,202,235 | 11,716,119 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 2,757,229 | 2,488,903 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 49,147 | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **16,008,611** | **14,205,022** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 2,674,268 | 2,488,903 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 13,202,235 | 11,716,119 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 82,961 | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 49,147 | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **16,008,611** | **14,205,022** |

பக்க இலக்கம் 09 முதல் 26 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 27 முதல் 32 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: ஜனாதிபதி சட்டத்தரணி அயெஷா ஜினசேன | பெயர்: திருமதி என். ஜி. டி. எஸ். தயானந்த | பெயர் : திருமதி. ஜி. டி. இ. தில்ருக்ஷி ,கணக்காளர் |
| பதவி :செயலாளர், நீதி மற்றும் ஒருமைப்பாடு அமைச்சு | பதவி : செயலாளர், கடன் இணக்க சபைத் திணைக்களம் | |
| திகதி : 28/02/2025 | திகதி : 2025.02.25 | திகதி : 2025.02.25 |
| Ayesha Jinasena, P.C. Secretary Ministry of Justice and National Integration No: 19, Sri Sangaraja Mawatha, Colombo 10. | Subhashinie Dayananda Secretary Department of Debt Concili... Board No 35 A, Dr.N.M.Perera Mawatha, Colombo 08. | G. T. E. Dilrukshi Accountant (Acting) Department of Debt Conciliation Board No. 35 A, Dr. N. M. Perera Mawatha, Colombo 08. |

3

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024 ரூபா | 2023 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 1,913,975 | 1,524,252 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 67,757,000 | 59,854,000 |
| முற்பணங்களை அறவிடல் | 1,459,746 | 909,397 |
| வைப்புக்களின் பெறுகை | 300,873 | 116,454 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | **71,431,594** | **62,404,103** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 66,397,393 | 60,129,986 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 28,640 | 30,484 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | 247,500 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 644,075 | 233,684 |
| முற்பணக் கொடுப்பனவு | 1,471,536 | 1,067,800 |
| வைப்புக் கொடுப்பனவு | 223,187 | 111,179 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | **68,764,831** | **61,820,633** |
| தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | **2,666,763** | **583,470** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |

| | | |
|---|---|---|
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u> | | |
| மூலதன செலவினம் | 2,617,616 | 583,470 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | **2,617,616** | **583,470** |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(2,617,616)** | **(583,470)** |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+தீ | **49,147** | - |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| <u>*கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*</u> | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | **49,147** | - |

5

## .2 வருமானம் சேகரித்தல் தொடர்பான செயலாற்றுகை

ரூ.

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் % சதவீதமாக |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவை | 90,000.00 | 90,000.00 | 117,642.14 | 130.71% |
| 20.03.99.00 | விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் ஏனைய வரவுகள் | 570,000.00 | 570,000.00 | 868,386.50 | 152.34% |
| 20.04.01.00 | ஏனையவை | 780,000.00 | 780,000.00 | 927,946.09 | 88.55% |

## 3.3 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான செயலாற்றுகை

ரூ.

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | | உண்மையான செலவு (ரூ. மில்லியன்) | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், ஒதுக்கீடுகள் பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் % சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடுகள் (ரூ. மில்லியன்) | இறுதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | | |
| மீண்டெழும் | 76,800,000.00 | 78,130,000.00 | 66,469,183.00 | 85% |
| மூலதன | 2,100,000.00 | 3,100,000.00 | 2,617,616.00 | 84.44% |

## 3.4 நி.ஒ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களின் பிரதிநிதி ஒருவராக மேற்படி திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்காக வழங்கப்பட்ட பிரதான ஒதுக்கீடுகள்

| தொடரி லக்கம் | ஒதுக்கீடுகள் அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டிற்கான நோக்கம் | ஒதுக்கீடுகள் | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் பெற்றுக்கொள்ளல் நிறைவு பெற்றுள்ள ஒதுக்கீடுகளின் % சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| ஏற்டையது அல்ல | | | | | |

## 3.5 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் செயலாற்றுகை

ரூ.

| சொத்துக்கள் | குறியீடுகளின் விபரங்கள் | 2024.12.31 ஆம் திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி (ரூ.) | 2024.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி (ரூ.) | எதிர்வரும் காலத்தில் கணக்கீட்டிற்கு உட்படுத்தப்பட உள்ள | செயலாற்றுகையினை % சதவீதமாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 11,716,118.97 | 13,202,334.72 | - | 100% |

## 3.6. கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை

**செயலாளர்**

**கடன் இணக்க சபைத் திணைக்களம்**

**தலைப்பு இலக்கம் 231 - கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கை**

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

தலைப்பிலக்கம் 231- கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று, அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் என்பன இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளன. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களின் ஊடான பாதிப்பு தவிர்ந்த, கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களின் மூலம் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல்கள் என்பன நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படைக்கு ஒத்தியங்கும் வகையில் சகல அளவு சார் தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமை ஒன்றினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்தின் மீதான அடிப்படை

மேற்படி அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மதிப்பீடு செய்யப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.கொ.) ஒத்தியங்கும் வகையில் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ள கணக்காய்வுச் சான்றுகள், போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கை ஆகும்.

### 1.3 விடயம் ஒன்றினை வலியுருத்துதல் – நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படையினை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 தொடர்பில் கவனத்தினைக் கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய கடன் இணக்க சபைத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றம் என்பவற்றின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது. ஆதலால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்காக பொருத்தமற்றதாக அமைய முடியும். எனது அறிக்கை கடன் இணக்க சபைத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றம் என்பவற்றின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்காகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றி அமைக்கப்படமாட்டாது.

### 1.4 நிதிக்கூற்று தொடர்பான தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு ஒத்தியங்கும் வகையில் சகல அளவு சார் தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமை ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய அளவுசார் பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகத்தினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானங்கள்,செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக கணக்கெடுப்புக்கள் உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளினால் ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்றுக்கள் அற்றவை என நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் அற்றவை என உறுதிப்படுத்தல் ஒன்றாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பாதிப்புச் செலுத்துவதன் காரணமாக அளவு சார் ரீதியில் தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், அதன் அளவுசார் தன்மை மேற்படி நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிபாலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால் மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவு சார் பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்றவற்றின் காரணத்தினால் ஆகும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்

### 1.6.1 முற்பணங்களைச் செலுத்துதல்

(அ) திறைசேரியின் அச்சிடப்பட்ட SA 52 இற்கு அமைய ஆண்டிற்குள் முற்பணக் கணக்குகளின் மூலம் நிதிக் கொடுப்பனவுகள் ரூ. 997,000 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அதனை ரூ. 474,536 தொகை என்ற வகையில் ரூ. 522,464 தொகை குறைவாகவும், குறுக்குப் பதிவுகளின் மூலம் கொடுப்பனவுகள் திறைசேரி அச்சிடப்பட்ட SA 52 இற்கு அமைய ரூ. 474,536 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அதனை ரூ. 997,000 தொகை என்ற வகையில் ரூ. 522,464 தொகை அதிகமாகவும், நிதிக் கூற்றுக்களில் ACA 5 மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) திறைசேரியின் அச்சிடப்பட்ட SA 52 இற்கு அமைய முற்பணக் கணக்கிற்கு ஆண்டிற்குள் பணமாகிய வைப்புக்கள் ரூ. 985,210 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், ரூ. 218,000 தொகை என்ற வகையில் ரூ. 767,210 தொகை குறைவாகவும், குறுக்குப் பதிவுகளின் மூலம் கொடுப்பனவுகள் திறைசேரி அச்சிடப்பட்ட SA 52 இற்கு அமைய ரூ. 218,000 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அதனை ரூ. 985,210 தொகை என்ற வகையில் ரூ. 767,210 தொகை அதிகமாகவும், நிதிக் கூற்றுக்களில் ACA 5 மாதிரிப்படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

### 1.6.2 கட்டுநிதி மீதி

(அ) திறைசேரி அச்சுப்பதிப்பு SA 71 இற்கு அமைய ஏனைய மூலங்களில் இருந்தான கட்டுநிதி வரவுகள் ரூ. 1,177,100 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், ACA 3 மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) திறைசேரி அச்சுப்பதிப்பு SA 71 இற்கு அமைய செலவுகளின் மூலம் கட்டுநிதியினை ஈடுசெய்தல் ரூ. 68,240,878 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், ரூ. 67,112,925 தொகை என்ற வகையில் ரூ. 1,127,953 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் ACA 3 மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

## 2. ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ). நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்குகின்றது எனவும்,

(ஆ). கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டு உள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் செலவின விடயங்கள் 13 இற்கும் மற்றும் மற்றும் மூலதனச் செலவின விடயங்கள் 03 இற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 62,610,000 தொகையில் ரூ. 11,718,665 தொகை எஞ்சி இருந்ததுடன், அது நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 71 வரையான வீச்சு ஒன்றிற்கு பரந்து காணப்பட்டது.

(ஆ) 231-1-1-0—1003 -11 செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூ. 2,330,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெறுமதி முழுமையாக எஞ்சிக் காணப்பட்டதுடன், மேற்படி செலவின விடயத்தின் ஒதுக்கீடுகளின் மொத்த மீதி ரூ. 4,921,627 தொகை ஆகக் காணப்பட்டது. 2024 மார்ச் 26 ஆம் திகதிய கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளரினால் தேசிய வரவு செலவு பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட DCB/AC/03/06/2024 ஆம் இலக்க கடிதத்திற்கு அமைய ரூ. 10,000 தொகை வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக நிலவும் ஒதுக்கீடுகளுடன் தேவைப்பாட்டினை சரியான முறையில் அடையாளம் காணாமல் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தில் இருந்து குறைநிரப்புக்கள் கோரப்பட்டு இருந்தன.

(இ) 231-1-1-0—1101 -11 செலவின விடயத்தின் மீதிகள் நூற்றிற்கு 67 ஆகக் காணப்பட்டதுடன், கிளை அலுவலகங்களைத் தாபிப்பதன் அடிப்படையில் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டமையினால் பிரயாணச் செலவுகள் குறைவடைதல் என்ற வகையில் மீதிகளுக்கு உரிய காரணங்களாக குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் கிளை அலுவலகங்களைத் தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. இறுதியாக கிளை அலுவலகங்கள் தாபிக்கப்பட்டு இருந்தது 2022 ஆம் ஆண்டில் ஆகையினால் இந்தக் காரணத்தை கணக்காய்விற்கு ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

(ஈ) 231-1-1-0—1401 -11 செலவின விடயத்தின் ஒதுக்கீட்டுத் தொகையாகிய ரூ. 200,000 தொகை முழுமையாக எஞ்சிக் காணப்பட்டதுடன், திணைக்களத்தில் போக்குவரத்துக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் இல்லாமை இந்த மீதிகளுக்கு காரணம் என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், போக்குவரத்துக் கொடுப்பனவுகளுக்கான உரித்துள்ள பதவிக்காக வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டு இருந்ததுடன், திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் போக்குவரத்துக் கொடுப்பனவுகளுக்கான உரித்துள்ள ஏனைய பதவிகள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) 231-1-1-0—1404 -11 செலவின விடயத்தின் ரூ. 2,068,000 தொகை அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து நூற்றிற்கு 14 வீதமான மீதிகளுக்காக கிளை அலுவலகங்களைத் தாபித்தல் தாமதமடைந்தமை என்ற வகையில் காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்தில் புதிய கிளைச் சபைகளைத் தாபித்தல் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) 231-1-1-0— 1506 -11 செலவின விடயத்தின் ரூ. 71,360 தொகை அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து நூற்றிற்கு 71 வீதமான மீதிகளுக்காக சொத்துக் கடன்களைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் குறைவடைந்தமையின் காரணமாக ஒதுக்கீடுகள் எஞ்சியன என்ற வகையில் காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டிலும் இந்த செலவின விடயத்தின் மீதிகளுக்கு உரிய காரணம் என்ற வகையில் மேற்படி விடயமே குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்கு அமைய தேவைப்பாடு சரியான முறையில் அடையாளம் காணப்படாமல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருந்தன.

(எ) 231-1-1-0— 2401 -11 செலவின விடயத்தின் ரூ. 135,500 தொகை அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து நூற்றிற்கு 34 வீதமான மீதிகளுக்காக பயிற்சி நிறுவனங்களினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்பாராத வகையில் 2025 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டமை காரணம் என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், பதவியணியினருக்கான பயிற்சி வழங்கல்கள் 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

### 3.2 சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான முன்னளிப்பு** | **இணங்கி ஒழுகாமை** |
|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.11 மற்றும் 5.4.12 ஆம் பிரிவுகள் | பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு வெட் வரியினைத் தழுவுவதற்காக பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு அறியத் தருதல் வேண்டும் எனினும், கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கடன் சலுகை (திருத்தச்) சட்டம் | |
| | i. 1 (1) ஆம் பிரிவு | கடன் இணக்க சபையின் உறுப்பினர்கள் 11 பேரினை உள்ளடக்கி இருத்தல் வேண்டும் எனினும், சபையானது |

| | | |
|---|---|---|
| | | 09 உறுப்பினர்களுக்கு மாத்திரம் வரையருக்கப்பட்டு இருந்தது. |
| | ii. 8 (3) ஆம் பிரிவு | சட்டதரணி ஒருவராக 10 வருடங்களிலும் குறையாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்ட அல்லது இலங்கை நிருவாக சேவையில் அல்லது நாடளாவிய சேவை ஒன்றில் தரம் I இலுள்ள பதவி ஒன்றினை வகிக்கும் அல்லது வகித்துள்ள நபர்களை சபையின் உறுப்பினர்கள் உள்ளடக்கி இருத்தல் வேண்டும் எனினும், அதற்கு முரணான வகையில் காலி கிளைச் சபைக்கு ஒரு உறுப்பினர் நியமிக்கப்பட்டு இருந்ததுடன், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று உறுப்பினர் கொடுப்பனவுகள், பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த கொடுப்பனவுகள் என்ற வகையில் மொத்தம் ரூ. 994, 500 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. |
| (இ) | 2011 சனவரி 21 ஆம் திகதிய மற்றும் 1689/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் | தலைவர் மற்றும் சபையின் அல்லது கிளைச் சபையின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது வீட்டிற்கு வெளியே உத்தியோகபூர்வ பணி ஒன்றில் ஈடுபட்டு இருக்கும் போது அவருக்கு அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் 06/2006 இன் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ரூ. 500 தொகை இணைந்த கொடுப்பனவு ஒன்று செலுத்தப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் இணைந்த கொடுப்பனவினைச் செலுத்தும் போது தாபன விதிக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவிற்கு அமைய பையின் உறுப்பினர்கள் வருகை தரும் மற்றும் வெளியேறும் நேரங்களைப் பதிவு செய்யாமையினால் எவ்வளவு காலம் பணியில் ஈடுபட்டனர் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் ரூ. 1,909,000 தொகைப் பணம் இணைந்த கொடுப்பனவுகள் என்ற வகையில் செலுத்தப்பட்டு இருந்தது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமை

(அ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது தீர்த்து வைக்கப்பட வேண்டி இருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1157 ஆகக் காணப்பட்டதுடன், இதற்குள் பிரதான அலுவலகத்தின் 162 விண்ணப்பங்களும், கொழும்புக் கிளையின் 159 விண்ணப்பங்களும், கம்பஹாக் கிளையின் 383 விண்ணப்பங்களும், காலி மற்றும் குருணாகல் கிளைகளின் விண்ணப்பங்கள் முறையே 212 மற்றும் 241 என்ற வகையில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது எஞ்சிக் காணப்பட்டது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்கப்பட்ட இதுவரை தீர்த்து வைக்கப்படாத வழக்குக் கோப்புக்களின் எண்ணிக்கை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது 12 ஆகக் காணப்பட்டதுடன் இதற்குள் விசாரணைக்காக காலத்தைப் பெற்றுக் கொண்ட வழக்குக் கோப்புக்கள் 7 காணப்பட்டன. அதற்கு அமைய 14 வருடங்களுக்கும் மேலான காலம் தொடக்கம் தீர்த்து வைக்கப்படாமல் பேணப்பட்டு வரும் வழக்குக் கோப்புக்கள் காணப்படுவது அவதானிக்கப்பட்டன.

3.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 12.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் நிதி ஆண்டு பூர்த்தியடைந்து 150 நாட்கள் கழியும் முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனினும், 2022 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது 2023 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஆகும்.

3.2 சொத்து முகாமைத்துவம்

இரண்டு மோட்டார் வாகனங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரயர்களுக்காக மொத்தம் ரூ. 188,000 தொகை விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது மற்றும் ரூ. 224,000 தொகை செலவினை எற்று வாகனம் ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்கு உரிய விலைப்பட்டியலுக்கு உரிய கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது உரிய பணிகளை உரிய முறையில் நிறைவேற்றி இருந்ததாக இயந்திரவியல் பொறியியலாளர் ஒருவரின் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்கள்

நிதி ஒழுங்குவிதி 880 இன் பிரகாரம் அரச நிதி வருமான முத்திரைகள் அல்லது பெருட் பண்டங்களைப் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறின்றேல் அரச நிதியினைப் பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரைகள் அன்றேல் பொருட் பண்டங்களை வழங்குதல் தொடர்பில் நிருவாக ரீதியாக பொறுப்புக் கூற வேண்டிய அல்லது பொறுப்பினை ஒப்படைத்தலின் கீழ் மேற்படி நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர்களும், அரச கணக்கிற்கு உரிய வவுச்சர் பத்திரங்களை உறுதிப்படுத்தும், காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் சொந்தக் கடமை நடவடிக்கைகளை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612 ஆம் அதிகாரம் ஆகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கும் நீதி அமைச்சின் 2011 சனவரி மாதம் 18 ஆம் திகதிய மற்றும் 01/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய பிணை வைக்கப்பட வேண்டிய 12 உத்தியோகத்தர்கள் பிணை வைத்து இருக்கவில்லை.

3.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் பிரதான அலுவலகத்திலும், 2023 நவெம்பர் மாதத்தில் பிரதான அலுவலகம் உட்பட சகல கிளை அலுவலகங்களிலும் வழக்குக் கோப்புக்கள் கையினால் கணிப்பிடப்பட்டு இருந்ததுடன், கையினால் கணிப்பிடும் போது ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களிலும் பார்க்க 2022 ஆம் ஆண்டின் வழக்குக் கோப்புக்கள் 248 இனாலும், 2023 ஆம் ஆண்டின் வழக்குக் கோப்புக்கள் 221 இனாலும் அதிகரித்துக் காணப்பட்டது. அதற்கு அமைய 2023 ஆம் ஆண்டில் கையினால் கணிப்பிடுவதன் காரணமாக பிரதான அலுவலகத்தின் வழக்குக் கோப்புக்கள் 83 இனாலும், கொழும்புக் களையின் வழக்குக் கோப்புக்கள் 48 இனாலும், கம்பஹாக் கிளையின் வழக்குக் கோப்புக்கள் 84 இனாலும் அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டு இருந்தது. இவ்வாறு அவ்வப்போது கணிப்பிடும் போது ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பௌதீகத் தகவல்கள் ஒன்றுக்கொன்று மாற்றமடைவதன் அடிப்படையில் கோப்புக்களின் பேணலிற்காக உரிய உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

4. நல்லாட்சி

4.1 உள்ளகக் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) ஆம் இலக்க பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்றினைத் தாபித்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

5. மனித வள முகாமைத்துவம்

5.1 இணைக்கப்பட்டு உள்ள பதவியணி, உண்மையான பதவியணி

| மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள்/ (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை மட்டம் | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை மட்டம் | 39 | 22 | 17 |
| ஆரம்ப நிலை மட்டம் | 09 | 09 | - |
| | 50 | 32 | 18 |

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதிற்கடமை நியமனம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டியது நிலையான நியமனம் ஒன்றினை மேற்கொள்ளும் வரை தற்காலி மாற்று நடவடிக்கை ஒன்றாக ஆகும் எனினும், சிரேஷ்ட மட்டத்தில் உள்ளடக்கப்படும் கணக்காளர் பதவி 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம்வெற்றிடம் நிலவுவதுடன் அமைச்சின் கணக்காளரினால் மேற்படி பதவியின் பதிற் கடமை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) இரண்டாம் நிலை மட்டத்தில் உள்ளடக்கப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆளணி 18 ஆகக் காணப்பட்ட போதிலும் உண்மையான ஆளணி 19 ஆகக் காணப்படுவதனால் மிகையாகக் காணப்படும் ஆனணி 01 ஆகக் காணப்பட்டதுடன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆளணி 15 ஆகக் காணப்பட்ட போதிலும் உண்மையான ஆளணி 06 ஆகக் காணப்படுவதனால் 09 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் தட்டச்சு எழுத்தாளர் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆளணி 06 ஆகக் காணப்பட்ட போதிலும் உண்மையான ஆளணி 03 ஆகக் காணப்படுவதனால் 03 வெற்றிடங்கள் காணப்பட்டன

ஆர்.எஸ்.கட்டுகம்பல

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகம் சார்பில்

# 04 ஆம் அத்தியாயம்

4.1 **தாபனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டி (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையில்)**

| **விஷேட குறிகாட்டிகள்** | **எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் சதவீமாக வெளியீடுகளாக உண்மையான சதவீதம் (%)** | | |
|---|---|---|---|
| | 100% 90% | 95% -89% | 50% -74% |
| பதவியணி ஊக்குவிப்பு | - | 75% | - |
| திணைக்களத்தில் சேவை வழங்கல் மற்றும் கிடைக்கப்பெறும் பிரச்சாரம் | - | 85 | - |
| திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவையின் பயனுறுதி | - | 80% | - |

# 05 ஆம் அத்தியாயம்

## நிலையான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி நோக்கங்களைக் குறிப்பிடவும்.

| இலக்குகள் / நோக்கங்கள் | இலக்குகள் | வெற்றிகளுக்குரிய குறிகாட்டிகள் | இது வரை வெற்றி பெற்றதன் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50%- 74% | 75%-100% |
| அசையாத சொத்துக்கள் தொடர்பான அடகு உறுதிப்பத்திரம் உத்தரவாத சொந்த உறுதிப்பத்திரம் மற்றும் வெறுமனே கடன் கொடுக்கல் வாங்கல் என்பவற்றிற்காக எழுதப்பட்ட சொந்த உறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய கடன் தொடர்பாக தரப்பினர்களை இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வருதல். | கடன் இணக்க சபையினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவையினை விரிவுபடுத்தல் மற்றும் வியாபித்தல் | கடன் இணக்க சபைக் கிளைகளை கம்பஹா, குருணாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு தாபித்தல் மற்றும் கொழும்பு மாவட்டத்திலும் புதிய கிளைச் சபை ஒன்றினைத் தாபித்தல். | | | 85% |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் தொடர்பான வெற்றிகள் மற்றும் சவால்கள் என்பவற்றை சுருக்கமாக விபரிக்குக.

கடன் இணக்க சபையின் கிளைச் சபைகள் கம்பஹா, காலி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டு பேணி வரப்படுகின்றன.

# 06 ஆம் அத்தியாயம்

## மனித வளக் கண்யோட்டம்

### 6.1 ஆளணி முகாமைத்துவம்

| | அனுமதிக்கப்பட்ட ஆளணி | நிலவும் ஆளணி | வெற்றிடங்கள் (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 02 | 01<br>01 (ப.க.) | 01 |
| இரண்டாம் நிலை | - | - | - |
| மூன்றாம் நிலை | 39 | 24 (02 இணைக்கப்பட்டு உள்ள) | 17 |
| ஆரம்ப நிலை | 09 | 09 | 0 |

### 6.2 தாபனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுக.

திணைக்களத்தின் சேவையினை வினைத்திறனுடனும் மற்றும் பயனுறுதியுள்ள வகையிலும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக திணைக்களத்தில் நிலவும் பதவியணி வெற்றிடங்கள் பெரிதும் பாதிப்புச் செலுத்துகின்றன.

மேற்படி கடன் இணக்க சபைக்குரிய திணைக்களத்தில் ஆரம்பநிலை நீதிமன்றம் ஒன்றும் இயங்கி வருவதனால் அதற்காக மிகவும் அத்தியவசியமான மனித வளம் ஒன்றாகிய 06 தட்டெழுத்தாளர் ஊழியர்கள், திணைக்களத்திற்காக அனுமதிக்கப்பட்டு உள்ளதுடன் மேற்படி ஆறு பதவிகளும் பல வருடங்களாக வெற்றிடம் நிலவுகின்றன. நீதி. சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் இணைக்கப்பட்டு உள்ள பெண் ஊழியர்கள் மாத்திரம் திணைக்களத்திலும் மற்றும் கிளைச் சபைகளிலும் பணி புரிந்து வந்துள்ளனர். நாள் ஒன்றிற்கு கடன் இணக்க சபையினால் கிட்டத்தட்ட 50 வழக்குகள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படுவதுடன், கடன் கோப்புக்களுக்கு உரிய தரப்பினர்களுக்கு பிரதிகளை வழங்கும் போது ஏற்படும் தாமதங்கள் தொடர்பில் திணைக்களத்தின் தட்டெழுத்தாளர் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களே பெரிதும் தாக்கம் செலுத்தி உள்ளன. தற்போதாகும் போது இதற்கான சேவைப் பிரமாணக் குறிப்பு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

*திணைக்களத்தில் நிலவும் விடயங்களைத் தழுவுவதற்கு போதிய அளவான ஆளணியினர் இல்லாமையின் காரணமாக ஒரு ஊழியர் பல விடயங்களுக்கு உரிய கடமைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதனால் திணைக்களத்தின் சேவையினை வினைத்திறனுடன் வழங்குவதில் தடைகள் ஏற்பட்டன. தற்போதாகும் போது கணக்காளர் சேவையின் ஒரு உத்தியோகத்தரும், 09 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் மற்றும் 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் குறைபாடாக உள்ளனர். அனுமதிக்கப்பட்ட ஆளணி 50 ஆகக் காணப்பட்ட போதிலும் வினைத்திறனான சேவை ஒன்றினைப் பேணி வருவதற்காக கிளை அலுவலகங்களுக்கு 02 தட்டெழுத்தாளர் பதவிகளும் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையின் பதவிகள் 02 வீதமும் நிலவுதல் அத்தியவசியமாக உள்ளது.*

## 6.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஆளணி | நிகழ்ச்சித்திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (உள்நாட்டு) | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு /வெளிநாட்டு) | வெளியீடு / பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| *Government payroll system* | 02 | 01 நாள் | 39,000/- | உள்நாட்டு | சம்பளங்களைத் தயாரித்தல் |
| சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்காக ஒழுக்காற்று மற்றும் அலுவலக நெறிமுறை விதிகள் | 03 | 02 நாட்கள் | 39,000/- | உள்நாட்டு | ஒழுக்காற்று மற்றும் அலுவலக நெறிமுறை விதிகள் |
| *Safe, scientific Economical* | 01 | 01 நாள் | 6000/- | உள்நாட்டு | சூழலுக்கு சாதகமான முறையில் வாகனங்களைச் செலுத்துதல். |
| *Financial regulation* | 01 | 01 நாள் | 7000/- | உள்நாட்டு | நிதி ஒழுங்குவிதி தொடர்பான அடிப்படை அறிவு |
| வருடாந்த பொருட்கள் மதிப்பாய்வு மற்றும் சொத்துக்களை கழித்து ஒதுக்குதல் பாடநெறி | 03 | 02 | 39,000/- | உள்நாட்டு | களஞ்சிய முகாமைத்துவம், சொத்துக்களைக் கழித்து ஒதுக்குதல். |
| *Public procurement procedures* | 01 | 01 நாள் | 40,000/- | உள்நாட்டு | பெறுகை வழிகாட்டல்கள் |
| அலுவலகப் பணியாளர் சேவையின் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் ஒழுக்காற்று | 01 | 02 நாட்கள் | 13,000/- | உள்நாட்டு | அலுவலகப் பணியாளர் சேவையின் ஒழுக்க நெறிமுறைகள் |
| *Preparation of document with MS word* | 02 | 01 நாள் | 15,500/- | உள்நாட்டு | MS word அடிப்படை அறிவு |
| செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நடைமுறை | 02 | 01 நாள் | 27,000/- | உள்நாட்டு | வவுச்சர் பத்திரங்களைத் தயாரித்தல் |
| *Implementation of Public accounting system & preparation of final accounts* | 02 | 02 நாட்கள் | 26,000/- | உள்நாட்டு | நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அடிப்படை அறிவு |
| ஒழுக்காற்று நடைமுறை விதிகள் | 01 | 02 நாட்கள் | 13,000/- | உள்நாட்டு | அரச உத்தியோகத்தர்களின் அடிப்படை ஒழுக்காற்று நடைமுறை விதிகள் |

அந்தந்த விடயப் பரப்புகளுக்கு உரிய வகையில் அறிவினையும் மற்றும் திறன்களையும் விருத்தி செய்வதற்குத் துணை புரியும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களை அனுப்பி வைப்பதன் மூலம் கூடிய வினைத்திறனுடன் சரியான முறையில் விடயங்களின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்கு இயலுமாவதன்

ஊடாக நிறுவனத்தின் செயலாற்றுகையினை விருத்தி செய்வதற்குத் துணைபுரியும்.

# 07 ஆம் அத்தியாயம்
# இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு | ஒத்தியங்குதல் தொடர்பான நிலைமை (ஒத்தியங்குகின்றது / ஒத்தியங்குவதில்லை) | ஒத்தியங்குவதில்லை எனின் அதற்காக சுருக்கமான விளக்கத்தினை வழங்குதல் | ஒத்தியங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மானங்களுக்கு உரிய நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| **1** | **கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய தினத்தன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஒத்தியங்குகின்றது. | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | ஒத்தியங்குகின்றது.. | | |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்திகள் தொடர்பான முற்பணக் கணக்குகள் (வணிக முற்பணக் கணக்குகள்) | ஒத்தியங்குவதில்லை | | |
| 1.4 | களஞ்சியசாலை முற்பணங்கள் | ஒத்தியங்குவதில்லை | | |
| 1.5 | விஷேட முற்பணக் கணக்குகள் | ஒத்தியங்குவதில்லை | | |
| 1.6 | ஏனையவை | ஒத்தியங்குவதில்லை | | |
| **2** | **ஏடுகள் மற்றும் ஆவணங்களைப் பேணி வருதல் (நி. ஒ . 445)** | | | |
| 2.1 | 267 / 2018 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்திற்கு அமைய நிலையான சொத்துக்களின் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகளுக்குரிய ஆவணங்கள் / தனியாளுக்கு உரிய அட்டைப் பத்திரங்களை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணைகளுக்குரிய | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஏற்புடையதல் ல. | இந்தத் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று காணப்படுவதில்லை. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது | |
| 2.5 | சகல மாதாந்தக் கணக்குகளினதும் சாராம்சங்களைத் (CIGAS) தயாரித்து உரிய தினத்தன்று பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பித்தல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளுக்குரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.7 | இன்வென்ட்ரி ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.8 | மொத்த இருப்பு தொடர்பான ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.9 | நட்டங்கள் இழப்பீடுகள் தொடர்பான ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.10 | பொறுப்புக்கள் தொடர்பான ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 2.11 | உப பத்திரங்கள் தொடர்பான ஏடுகளின் ஆவணத்தினை ( GA-N20) இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| **3** | **நிதி நிருவாகத்திற்கான பணிகளை பிரதிநிதித்துவம் செய்தல் (நி. ஒ . 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் தாபனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குகி ன்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3.2 | நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல் தொடர்பாக தாபனத்தில் உள்ளவர்களுக்கு அறிவூட்டி இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலானோர் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 3.4 | ஆம் திகதிய 2014.05.11 மற்றும் 171 / 2004 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரச சம்பள அட்டைகளுக்குரிய மென்பொருள் பகேஜினைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **4** | **வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 4.2 | வருடாந்த பெறுகைகள் திட்டத்தினைத் தயாரித்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல் | ஒத்தியங்குகின்றது. | மேற்படி திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று காணப்படவில்லை என்பதுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுகள் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு (NBD) உரிய தினத்தன்று சமர்ப்பித்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 4.5 | வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றினை உரிய | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தினத்தன்று திறைசேறிகள் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து இருத்தல் | | | |
| **5** | ***கணக்காய்வு விசாரணை*** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் குறித்துரைக்கப்பட்டு உள்ள தினத்தன்று சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **6** | ***உள்ளகக் கணக்காய்வு*** | | | |
| 6.1 | நி. ஒ. 134 (2) DMA/1 2019 இற்கு அமைய வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல் | ஒத்தியங்குவதில்லை. | மேற்படி திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று காணப்படவில்லை என்பதுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுகள் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| 6.2 | ஒவ்வொரு கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை வழங்கி இருத்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 40 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குவதில்லை. | மேற்படி திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று காணப்படவில்லை என்பதுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுகள் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| 6.4 | நிதி ஒழுங்கு விதி 134 (3) இன் பிரகாரம் சகல கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல். | ஒத்தியங்குவதில்லை. | மேற்படி திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று காணப்படவில்லை என்பதுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுகள் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| **7** | ***கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழு*** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7.1 | DMA சுற்றுநிருபம் 1-2019 இற்கு அமைய ஆகக் குறைந்தது 04 கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாவது, வருடத்திற்குள் நடாத்தப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது | | |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவம் தொடர்பான சுற்றுநிருபத்தின் 07 ஆவது அத்தியாயத்திற்கு அமைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கழித்து ஒதுக்குதல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 8.2 | மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் 13 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம், மேற்படி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து மேற்படி உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 8.3 | 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைய பொருட்கள் கணக்கெடுப்பினை நடாத்தி உரிய அறிக்கைகள் உரிய தினத்தன்று கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 8.4 | வருடாந்தப் பொருட்கள் கணக்கெடுப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மிகை, குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் என்பன சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல். | | | |
| 8.5 | கழித்து ஒதுக்கப்பட்ட பொருட்களை அகற்றும் நடவடிக்கைகளை நி.ஒ. 772 இற்கு அமைய மேற்கொள்ளல் | ஒத்தியங்குகின்றது. | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குலாத்திலுள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் என்பவற்றைத் தயாரித்து உரிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 9.2 | வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதத்திலும் குறைந்த காலப்பகுதி ஒன்றில் அகற்றப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குவதில்லை. | | |
| 9.3 | வாகன விவரக் குறிப்பேட்டினைப் பேணி வருவதுடன் அவற்றை இற்றைப்படுத்திப் பேணி வருதல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய மற்றும் 2016 / 30 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், வாகனங்களின் எரிபொருள் தகனத்தினை மீளப் பரீட்சித்தல். | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.6 | குத்தகைக் காலப்பகுதியின் பின்னர், குத்தகை வாகனங்களின் விவரப் பதிவேடுகளின் முழுமையான உரித்தினை சுவீகரித்துக் கொண்டு இருத்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| **10** | **வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய தினத்தன்று வங்கிக் கணக்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 10.2 | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்கள் தொடக்கம் முன்கொண்டு வரப்பட்ட செயலிழந்துள்ள வங்கிக் கணக்குகள் சீர் செய்யப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 10.3 | வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி மீதிகள் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்து வைக்கப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| **11** | **ஒதுக்கீடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | வழங்கப்பட்டு இருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரையறையினைத் தாண்டிச் செல்லாத வகையில் செலவுகளை ஏற்றல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 11.2 | நி. ஒ. 94 (1) இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து செலவு செய்ததன் பின்னர் ஆண்டின் இறுதியில் ஒதுக்கீடுகள் அதன் வரையறையினைத் தாண்டிச் செல்லாத வகையில் கடன் பொறுப்புக்களைக் கைச்சாத்திடல் | ஒத்தியங்குவதில்லை. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **12** | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு ஒத்தியங்குதல் | ஒத்தியங்குகின்றது. | | |
| 12.2 | நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டு வரும் கடன் மீதிகள் தீர்வை செய்யப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பான நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல். | ஏற்புடையதாகும். | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்குரிய நிருவாகக் கணக்கினை இற்றைப்படுத்திப் பேணி வருதல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 14.2 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்காலக் கட்டுநிதி, மேற்படி பணி பூர்த்தியடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 14.3 | நி.ஒ. 371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்டு உள்ள வரையறையினைத் தாண்டிச் செல்லாத வகையில் குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதியினை திறைசேரி | ஒத்தியங்குகி | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்பிட்டுப் பார்த்தல் | ன்றது. | | |
| **15** | **வருமானக் கணக்குகள்** | | | |
| 15.1 | உரிய ஒழுங்குவிதிகளுக்கு ஒத்தியங்கும் வகையில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மீளச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 15.2 | சேகரிக்கப்பட்டு இருந்த வருமான வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு வைப்புச் செய்யப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 15.3 | நி. ஒ. 176 இற்கு அமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகி ன்றது. | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாத்தினரை வரையறைக்குள் பேணி வருதல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 16.2 | அலுவலர் குழாத்தில் உள்ள சகல உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகி ன்றது. | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய மற்றும் 04/2017 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குகி ன்றது. | | |
| **17** | **பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.1 | தகவல்கள் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல்கள் வழங்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணம் ஒன்றினை இற்றைப்படுத்திப் பேணி வருதல். | ஒத்தியங்குகின்றது. | திணைக்களத்திற்காக இணையத்தளம் ஒன்று காணப்படுவதில்லை என்பதுடன் நீதி அமைச்சின் இணையத்தளத்தில் மேற்படி திணைக்களம் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. | |
| 17.3 | தகவல்கள் அறியும் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினை நடைமுறைப்படுத்தல்** | | | |
| 18.1 | 05/ 2008 மற்றும் 05 / 2018 (1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்தவ அமைச்சின் சுற்றுநிருபங்களின் பிரகாரம் பிரசைகள் மற்றும் சேவை பெறுநர் பட்டயம் ஒன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 18.2 | மேற்படி சுற்றுநிருபத்தின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பிரசைகள் மற்றும் சேவை பெறுநர் பட்டயம் ஒன்றினைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக தாபனத்தினால் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு இருத்தல் | ஒத்தியங்குகின்றது. | | |
| **19** | **மனித வளங்களின் பயன்பாடு** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 02 இன் | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வளங்கள் தொடர்பான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருத்தல் | | | |
| 19.2 | பதவியணியில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு ஒன்று மேலே குறிப்பிடப்பட்டு உள்ள மனித வளங்கள் தொடர்பான திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 19.3 | மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மொத்த பதவியணியினருக்குமாக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| 19.4 | மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல், கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு இருத்தல். | ஒத்தியங்குகின்றது. | | |
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்கு மறுமொழி வழங்குதல்** | | | |
| 20.1 | கடந்த வருடங்களுக்காக கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் | ஒத்தியங்குகின்றது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு உள்ள குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு இருத்தல். | | | |